


திருவள்ளுவநாயனார்.

[ஆசிரியர் திருநாமங்கள்-௯.]	[நூலின் திருநாமங்கள்-௯.]
திருவள்ளுவர்	திருக்குறள்
நாயனார்	முப்பானூல்
தேவர்	உத்தரவேதம்
முதற்பாவலர்	தெய்வநூல்
தெய்வப்புலவர்	திருவள்ளுவர்
நான்முகனார்	பொய்யாமொழி
மாதானுபங்கி	வாயுறைவாழ்த்து
செந்நாப்போதார்	தமிழ்மறை
பெருநாவலர்	பொதுமறை



உ

சிவமயம்.

திருவள்ளுவநாயனார் சரித்திரம்.

உலகத்தின் மஹா சிறப்புப் பொருந்தி விளங்கும் திருக்கைலாயத்திலே உயர்வொப்பில்லாத செம்பொற் திருக்கோயிலிலே நவரத்தினங்களால செய்யப்பட்டு, சூரியனாதி பிரகாசத்துக்கும் மேம்பட்டு விளங்கும் திவ்விய சிங்காதனத்திலே, பிரம்மாதி முப்பத்துமுக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணாயிர முனிவர்கள், கின்னரர், கிம்புருடர், கருடர், காந்தருவர், சித்தர், வித்தியாதரர் முதலானவர்கள் இருபுடைசூழ் நின்று வணங்கித் தோத்திரித்து நிற்கவும், ஜயசமங்களின் பேரொலி எங்கும் தங்கித்தோன்றவும், தமது அருட்சத்தியும் உலகமாதாவுமாகிய உமாதேவியார் இடப்பாகத்தில் வீற்றிருக்கவும் அளவிறந்த பெருங் கருணையோடு பரமசிவம் திருவோலக்கமாக எழுந்தருளியிருந்தார். அப்பேர்த

உமாதேவியானவள் எழுந்து வணங்கி நின்று சுவாமீ! திரிலோகங்களிலே இல்லறம் வழுவாது நடந்துகதியடைந்தவருண்டோ? என்று மிகுந்த கருணையோடு வினவ, பரமேஸ்வரர் அருளிச்செய்கின்றார்:—

உமையவளே! தெய்வலோகத்தில் வசிஷ்டர், அகஸ்தியர், அயன், புயங்கன், சம்பு என்று ஐந்துபேருண்டு. பூலோகத்தில் திருவள்ளுவனென்றொருவருண்டு. இவர்கள் தென்புலத்தார்கடன், தேவர்கடன், விருந்தோம்பல், சுற்றந்தழுவல், கபிலைபூசைசெய்தல் முதலிய இல்லறத்தில் கற்பின்வழுவாத நற்குண நற்செய்கையுள்ள மனைவியரோடிருந்து, இல்லறக்கடன் நடத்தி மோக்ஷமடைந்தாரென்று, திருவாய் மலர்ந்தருளப் பார்வதியார் "சுவாமீ! பூலோகத்திலே திருவள்ளுவர் என்பவர் யார்? அவர்சரித்திரம் கேட்க விரும்புகின்றேன்" என்றுகேட்க, சிவபெருமான் சொல்லுகின்றார்:—பூர்வத்திலே ஒரு பிரளயம்வந்தது. அது வருமென்று, பிரம்மா முன்னமேதெரிந்து அதிலே இறவாதுபிழைக்கும்படி வேற்றுருவடைந்து ஒரு சுரைக்குடுக்கையைத் தனக்கிடமாகக்கொண்டு அதிற்புகுந்து அவ்வெள்ளத்தின்மேல் மிதந்துவந்தார். அதுகண்டு,

நாம் அறியாதவர்போல் இதற்குள்ளிருப்பவன் ஆரென்றுகேட்டோம். தான் வருங்காலமறிந்து செய்தற்கேற்ப வள்ளுவனென்றார். இப்பிரளயத்தில் நீர் எப்படிப் பிழைத்திருந்தீரெனக் கேட்டோம். அப்போது பிரமன் நம்மைப்பரமேஸ்வரரென்று தெரிந்துகொண்டு மிகுந்த பேரானந்தத்தையடைந்து, "பரமசிவமே! உமது திருவருளினால்பிழைத்திருந்தேன்; ஆயினும், தேவரீர் அடியேன்மீது கிருபைகூர்ந்து இந்தப்பிரளயத்தைநீக்கியருளவேண்டுமென்று வேண்டிக்கொள்ள, நாம் அந்தஅதிகாரம் உமக்கே

கொடுத்தோம் என்று அவராலே முன்பு போல் உலகத்தைச் செய்வித்தோம் ; அத்

தன்மையுடைய அவர் பூமியிலேபிறந்தகார ணமுஞ் சொல்லுகின்றோம்.

ஆதிகாலத்தில் பூமியிலே பாண்டிநாட் [illegible]மதுராமாநகரத்திலிருந்த சங்கப்புல வர்கள் நம்மை ஓர்கால் அவமதிப்புச் [illegible] ததின்பொருட்டு அவர்கள் கர்வபங்கமாகு ம்படிப் பிரமஸ்வரூபா[illegible]ருவள்ளுவ ரையும், மஹாவிஷ்ணுவையும், சரஸ்வதி யையும் பூமியில் அவதரிக்கும்படி [illegible] னோம். அவருள் மஹாவிஷ்ணு இடை[illegible]ாட

[illegible]ப்பிறந்தார். சரஸ்வதியும் திருவள்ளுவ ரும் வந்தமரபுங்கேட்பாயாக.

ஆதியிலே பிரம்மபுத்திரர்களாகிய காசி பர்முதலிய நவப்பிரமாக்களில் காசிபர்என்ப வசியைச்சேர்ந்து வசிஷ்டரைப் பெற்றார். அவர் அருந்ததியைச்சேர்ந்து சத்தியரைப் பெற்றார். அவர் புங்கனூர்ப் புலைச்சியைச் சேர்ந்து பராசரைப்பெற்றார். அவர் மச்ச கந்தியைச்சேர்ந்து வியாசரைப் பெற்றார். இவர்கள் நால்வரும் வேதங்களுக் குரியவ ரானார்கள்.

பின்பு பிரம்மாவானவர் இன்னுஞ் சில புத்திரரால் வடமொழியையுந் தென்மொ ழியையும் விளங்கச்செய்யவேண்டுமென்று எண்ணி, வேதவிதிப்படி ஒருயாகஞ்செய்ய, அதன்கண் வைத்திருந்த கும்பத்தினின்றும் கலைமகள் அவதரித்தனள். அவளைப்பிரமன் விவாகஞ்செய்துகொண்டார். பின்பு அதன் [illegible] குறியவடிவோடு அக்கும்பத்துதித்த னர். அவர் சமுத்திரக்கன்னிகையை மண ந்து பெருஞ்சாகரனென்பவரைப்பெற்றார். அவர் திருவாரூர்ப் புலைச்சியைச் சேர்ந்து புகழேனென்பவரைப் பெற்று, அவர்க்குச் சகலசாஸ்திரங்களையுங் கற்பித்தார். அந்தா [illegible]பிரம்மவம்சத்தில் தவமுனி என்பவர்

அருண்மங்கை என்னும் பிராமணமாதைச் சேர்ந்து ஒரு புத்திரியைப் பெற்றுவைத்து விராலிமலையில் தவஞ்செய்யச் சென்றனர். அக்குழந்தையை உறையூர்ப் பெரும்பறையன் கண்டெடுத்துச் சிலகாலம் வளர்த்து வருகையில் மேல் நடக்கப்போகிற காரணத்தினால் இந்தப்பெண்தவிர மற்றவர்கள் யாவரும் இறக்கும்படி அந்தச் சேரியில் எக்காரணமுமின்றி மண்மாரி பெய்தது. பின்பு அந்தப்பெண் அதற்கடுத்த மேலூர் அகரத்திலே நீதியையன்வீட்டில் வளர்ந்திருந்தனள்.

அப்போது பகவனென்பவர் சகலசாஸ்திர பண்டிதராய்க் கண்டவர் யாவரும் மரியாதை பண்ணும்படிப்பிராமண கிர்த்தியத்தில் வழுவாதவராயிருக்கையில் யாத்திரை பண்ணும்படி இச்சைகொண்டு, காசிக்குப் போம்போது இவ்வகரத்துக்கடுத்த ஒரு சத்திரத்திலிறங்கி நித்தியகருமானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு சமையல்செய்து கொண்டிருந்தார். அவ்விடத்தில் அந்தப் பெண்வர அவனைக்கண்டு நீயார்? புலைச்சியோ! வலைச்சியோ! இங்கேவந்தாயென்று, அதட்டி மிகுந்த கோபங்கொண்டு சட்டுவத்தால் அவளது தலையிலே உதிரஞ்சோர

அடித்தோட்டினார். அவள்அழுதுகொண்டு தன்னிடத்துக்குப்போய்விட்டாள்.

மறுபடியும் பகவனென்பவர் ஸ்நானஞ்செய்து போசனம்பண்ணி அதிசீக்கிரத்தில் வழிகொண்டு சிலநாளிற் காசிக்குப்போய்க் கங்காஸ்நானஞ்செய்து பிரயாகையிலிருந்து தீர்த்தக்காவடி கட்டிக்கொண்டு வரும்போது, முன்தங்கியிருந்த சத்திரத்தில் வந்திறங்கினார். மேற்சொல்லிய பெண்ணானவள் அப்போது மஹா லட்சுமியைப்போலும் அழகும், யவ்வனபருவமும், உடையவளாய் அங்கேவந்தாள். பகவனென்பவர்

இவளுடைய சௌந்தரியமுதலிய குணங்க
ளைப்பார்த்துமோகங் கொண்டார். அச்சத்
திரத்துக்கு அதிபராகிய நீதிஐயனென்ப
வர் அக்குறிப்பினைக்கண்டு, என்பெண்ணை
நீர் விவாகம்பண்ணிக்கொண்டு இங்கேயே
யிருமென்றுசொல்ல, அதற்கு அவர் நான்
கொண்டுவந்தகாவடியையிராமேச்சுரத்திற்
செலுத்திவந்து அப்படியே செய்கிறேனெ
ன்று உறுதிமொழிகூறி, அவரிடத்திற் செ
லவுபெற்றுக்கொண்டுபோய், இராமலிங்கத்
துக்கு அபிஷேகம்பண்ணித் திரும்பிவந்
தார். அப்போது நீதிஐயர் விவாகம் எத்
தனம்பண்ணிப் பந்தமித்திரர்களோடிருந்

து, விசேஷமாய் நாலுநாளைய சடங்குகளும்
செய்து, ஐந்தாநாள் மங்களஸ்நானஞ் செய்
விக்கும்போது பகவனென்பவர் அந்தப்
பெண்ணினுடையதலையில் எண்ணெயை
ப்பெய்யும்படி மயிரைவகிர்ந்தார். அப்
போது தான் முன்பு சட்டுவத்தாலடித்த
வடுவைக்கண்டு அனுமானித்து இந்தப்பெ
ண் யார்? என்று வினவி அதன் வரலாற்
றையும் விசாரித்து, விசனங்கொண்டு, நீ
ஆதியல்லவா ! வென்று சொல்லிவிட்டு
ஓடினார். அதுவே அவளுக்கு ஆதியென்னும்
காரணப் பெயராயிற்று.

அபபடி ஓடிய பகவனென்பவர் பொழு
துபோகையில் எதிரேகண்ட பாணர்சேரி
யில் இருந்த ஒருமண்டபத்திலே தங்கினார்.
ஆதியென்பவளும் அவர் பின்னே தொட
ர்ந்து அவரைக்கண்டு வணங்கிநின்று, என்
அன்பிற்கினிய பர்த்தாவே! தெய்வச் செய
லால், உமக்கும் எனக்கும், இந்தக்காரியம்
நடந்திருக்கச்சகலநீதியும்அறிந்த நீரென்னை
விட்டுப்போகுதல் உமக்குத்தகுமோ? அல்
லது தருமமோ ? அரைக்கணம் உம்மைநீங்
கி நான் உயிர்வாழ்ந்திருப்பனோ? வென்று,
மிகவும் இரக்கத்துடன் சொல்லப் பிராரத்
துவகர்மவசத்தால் இவர் புத்தியினும், அது

சரியென்றுபட்டுப் "பெண்ணே ! என்னிட

த்தில் உனக்கு உண்மையான அன்பு இருக்
குமானால் யான்சொன்னபடிகேட்கவேண்
டும்.அஃதென்னெனில், "உனக்குப் பிள்ளை
கள்எங்கெங்கே பிறக்கிறதோ! அங்கங்கே
அவைகளை அப்பொழுதேவிட்டுவருவையா
னால்தான் உன்னைக்கூடச் சம்மதிப்பேன்"
என்றுசொல்ல, அவள் அதற்கு உடன்பட்
டபடியால்,அன்றிரவில் அம்மண்டபத்தில்
இருவருங் கூடினார்கள்.

அப்போது நம்முடைய உத்திரவின்படி
சரஸ்வதியாவராலும் புகழப்பட்டஔவை
யாகப் பிறந்தாள். இந்தக்குழந்தையையா
வர் காப்பாற்றுவார் என்றுவிட்டுநீங்கத்தாய்
வருந்தும்போது அது சொல்லியது.

ஔவை.

இட்டமுட னென்றலையி லின்னபடி யென்றெழுதி
விட்ட சிவனுஞ்செத்து விட்டானோ—முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவ னுக்கன்றோ
நெஞ்சமே யஞ்சாதே நீ.

அதுகேட்டு மனந்தணிந்து போயினள்;
பின்பு அக்குழந்தையை அச்சேரியிலுள்ள
பாணர்களெடுத்து வளர்க்க,வளர்ந்த சரஸ்
வதி ஆகையால் இயல்பாகவே கலைமுழு
வது மதித்து, "சீதக்களப" வென்றுங்

கணபதி அகவல்பாடி அவரை உபாசித்து,
உலகோபகாரமாக "ஆத்திசூடி, கொன்
றைவேந்தன், மூதுரை, நல்வழி, குறள்,
அசதிக்கோவை, நன்னூற்கோவை, நான்
மணிக்கோவை, பந்தனந்தாதி, அருந்தமிழ்
மாலை,தரிசனப்பத்து" முதலியவுஞ்செய்து
ஒவ்வொரு காரியத்தின்பொருட்டுத்தனிக்
கவிதைகள் அநேகம்பாடி, அநேக அற்புத
ங்களெல்லாஞ் செய்து முடித்துவருநாளில்
ஒருநாள் கணபதி பூசை விரைவாகச் செய்
தாள். அவர் வழக்கப்படியன்றி, விரைந்து
செய்வது ஏனென்றுகேட்க, சுவாமி! "சுந்த
ரமூர்த்தியாரும், சேரமான் பெருமானாரும்
கைலாயத்துக்குப்போகின்றார்கள். என்னை
யும் அழைத்தார்கள்" என்ன,அவர்களுக்கு
முன்னே உன்னை, அங்கேவிடுவேன் ; நீ

பூசையை வழக்கப்படி முடி என்றார். தன் பூசையைக்கிரமப்படி முடித்தான். உடனே கணபதி துதிக்கையால் எடுத்துவிடக் கைலாசமலையை அடைந்தான். பின்பு போன அவ்விருவரும் ஔவையைக்கண்டு, அதிசயப்பட்டார்கள்.

இதுநிற்க, முன்புபோன இருவர்களும், தொண்டைநாட்டில் வெற்றுக்காடென்னும் ஊரிலுள்ள ஓர் மடத்திற்சென்று கூடினார்

கள். அப்பொழுது உப்பை என்பவள்பிரசவித்தாள். இக்குழந்தையை யாவர் காப்பாற்றுவார் என்று அதைவிட்டு நீங்கத் தாய் வருந்தும்போது அது சொல்லியது.

உப்பை.

அத்தி முதலெறும்பீ றானவுயி ரத்தனைக்குஞ்
சித்த மகிழ்ந்தளிக்குந் தேசிகன்—முத்தரையே
கற்பித்தான் போனானோ காக்க கடனிலையோ
அற்பனோ வன்னா யரன்.

அதுகேட்டு மனந்தணிந்து போயினள். அவ்வுப்பை முற்பிறப்பில் யாரெனில், பிருகுவின் பத்தினியாகிய நாகவல்லி எனபவள்; திரிமூர்த்திகளும் அவள் அழகின் மிக்கவளென்று கேள்விப்பட்டுப்பார்க்க மாறுவேஷங்கொண்டுபோய் நிர்வாண பிட்சை கேட்டார்கள். அவள் மஹாபதிவிரதையாகையால் இவர்களைப் பாலராக்கி, அப்படியே பால்கொடுத்துத் தன்னைப் பரிசோதித்ததற்குக் கோபங்கொண்டு அவர்களைமூன்றாசனனம் எடுக்கும்படிச்சொன்னாள். "அதுகண்ட திரிமூர்த்திகளுந் தங்களை அவள் மதிக்காமல் பாலராக்கி, மூன்று சனனம் பண்ணும்படிச் சொன்னதற்காகச் சினங்கொண்டு நீ அழகின்றி, மாறுவடிவாகக்கடவை" என்று சபித்துப்போயினர். பின்பு

பிருகுவானவர் இவள் வேற்றுவடிவைக்கண்டு, நீ பூமியில் பிறக்கக்கடவை என்றனர். அவள் கணவனுத்தரவின்படி உப்பை என்பவளாக அவதரித்து வண்ணார் வளர்க்க வளர்ந்து, மாரியம்மையாய் உலகமெல்லாக்

தன்னைப்போற்ற இப்பொழுதும் அவ்வூரில் தெய்வமாக இருக்கின்றனன்.

இதனிற்க; முன்புபோன அவ்விருவருஞ் சோழதேசத்திற் கருவூரிலடைந்த ஒரு சோலையிற்கூட அதிகமான் என்பவர் பிறந்தார். இந்தக்குழந்தையை யாவர் காப்பாற் றுவார் என்று அதைவிட்டு நீங்கத் தாய் வருந்தும்போது அது சொல்லியது.

அதிகமான்.

கருப்பைக்குள் முட்டைக்குட் கல்லினுட் டேரைக்கும்
விருப்புற நல்குமொருவ னில்லையோ—வுருப்பெற்று
ஊட்டி வளர்க்கானோ வோவோ வுலகீர்காள்
வாட்ட முனைக்கேனோ மகிழ்.

அதுகேட்டு மனந்தணிந்து போயினள். அந்தக் குழந்தையைச் சேரமான் எடுத்து வளர்க்க வளர்ந்து, வில்வேதம் மனுவிக்கி யான முதலிய யாவுங்கற்று, முடிசூட்டப் பெற்று, சொக்கநாதர் திருமுகமெழுதிக் கொடுக்க, பாணபத்திரருக்கு வேண்டிய திரவியங்கள் கொடுத்துப் பொன்வண்ணத்

௧௨. திருவள்ளுவநாயனார் சரித்திரம்.

தந்தாதி என்றோர் பிரபந்தம்பாடிச் சிதம் பரத்தில அரங்கேற்றி அரசசெலுத்திச் சுந் தரமூர்த்தியார் கட்டுப்பெற்றிருந்து அவர் கைலைக்குப்போகும்போது, உடனேபோய் அங்கே தாம் பாடியருளிய ஆதியுலாவை அரங்கேற்றி நமது அனுக்கிரகம் பெற்று, வீற்றிருந்தார்.

முன்புபோன அவ்விருவருங்காவிரிப்பூம் பட்டினத்தடைந்து ஒருமண்டபத்திற்கூடி னார்கள். உறுவை என்பவள்பிறந்தாள். இந் தக்குழந்தையை யாவர்காப்பாற்றுவாரென் று அதை விட்டுநீங்கத் தாய்வருந்தும்போ து அது சொல்லியது.

உறுவை.

எண்ணரிய பக்குவத்தி லெவ்வுயிர்க்கு மூட்டுவித்துத் தாமருந்தும்
அண்டத் துயிர்பிழைப்ப தச்சரிய—மண்டி

அன்னையு மன்று யாருடைய வுண்மை
[illegible] திதை யில்.

அதுகேட்டுத் தாய் மனந்துணிந்துபோயி
னள். பின்பு அக்குழந்தையைக்கள்விற்போ
ரெடுத்து வளர்க்க, வளர்ந்து தவஞ்செய்து,
பத்திரகாளியாய்த் தாருகனைக் கொன்று,
திருவாலங்காட்டில் சபாநாயகராய் எழுந்
தருளிய சம்முடனேநிருத்தஞ்செய்து,தோ
ற்று அகோரவீரபத்திரனை விவாகம்பண்
ணிக்கொண்டு அவ்விடத்தில் இருந்தாள்.

இதனிற்க, முன்பு அவ்விடம் விட்டுப்
போன இருவரும், திருவாரூரை யடைந்து
ஒருமடத்திற்கூடக் கபிலர் என்பவர் பிறந்
தார். இந்தக் குழந்தையை யாவர் காப்பா
ற்றுவார் என்று, அதைவிட்டு நீங்கத் தாய்
வருந்தும்போது அது சொல்லியது.

கபிலர்.

என்றுமுதலாக் காட்டிற் கருக்கொற் றவனீக்கு
முன்னும் படைத்த நாட்டமைவர்—என்னு
மிகாலும் படியளப்பார் சாகியோர் பாகர்
தமக்குத் தொழிலெனன தான.

அதுகேட்டு மனந்துணிந்து போயினள்.
அக்குழந்தையைத் தமக்குப்பிள்ளையில்லாத
பாப்பையனென்னும், ஒரு பிராமணன்
எடுத்து வளர்த்து, எழுவயதில் உபநயனம்
செய்யத் தொடங்குகையில் பிராமணர்கள்

ஒத்துக் கொள்ளமாட்டோம் என்று சொ
ல்ல, அதைக்கண்ட கபிலர் அவர்களைப்பா
ர்த்து,நான்முகத்தோன் என்று ஓர் அகவல்
சொல்லிக் கருமத்தினால் ஜாதியன்றிச் செ
ன்மத்தால் இல்லை என்று சாதிக்க, அதற்
குப் பிரதியுத்தரஞ் சொல்லமாட்டாமல்
இதுவேவிதி என்று, யாவரும் ஒத்துக்கொ
ண்டு அச்சடங்குமுதலானவை முடித்தார்
கள், அக்கபிலர் இன்னும் பாதாளலோகத்

தில் தவம்பண்ணிக்கொண்டிருக்கின்றனர்.

இதனிற்க, முன்புபோன அவ்விருவரும்,
வேளின்மலைச்சாரலில் வந்துகூட, அப்பொ
ழுது வள்ளியம்மை பிறந்தனள். இக்குழந்

தையை யாவர் காப்பாற்றுவார் என்று, அதைவிட்டு நீங்கத் தாய் வருந்தும்போது அது சொல்லியது.

வள்ளியம்மை.

[illegible]

அதுகேட்டு மனந்துணிந்து போயினள். பின்பு அக்குழந்தையை மலைக்குறவர் வளர்த்தார்கள். அவள் முற்பிறப்பில் ஆரொனில் "மஹாவிஷ்ணுவினால் மோகிக்கப்பட்ட விபுதை என்பவளிடத்தில் பிறந்த குமரி." அவள் குமாரக்கடவுளைக் குறித்துத் தவ

ஞ்செய்தபோது, அவர் வரப்படி தொண்டைமண்டலத்தில் வள்ளிமலையில் இருக்

தகடவுளுக்கு நாயகியானாள்.

முன்புபோன அவ்விருவரும், திருமயிலாப்பூரில் இலுப்பைத்தோப்பில் கூடினார்கள். அப்பொழுது திருவள்ளுவர் பிறந்தனர். இக்குழந்தையை யாவர் காப்பாற்றுவார்

என்று அதைவிட்டு நீங்கத் தாய் வருந்தும் போது அது சொல்லியது.

திருவள்ளுவர் வெண்பா.

எவ்வுயிருங் காக்கவொரு ஈசனுண்டோ இல்லையோ
அவ்வுயிரில் யானொருவ னல்லேனோ — வவ்வி
[illegible]
[illegible]

அதுகண்டு தாய்மனந்துணிந்து அவ்விருவருந் தீர்த்தயாத்திரைக்குப் போயினர். பின்பு சிவாலயத்தின் அருகே உள்ள இலுப்பைமரத்தின்கீழிருந்த குழந்தை அவ்விலுப்பைமலர்த் துளிக்குந் தேனை உண்டு, பூர்வம்பிரம்மாவானதலால், சிகை எக்யோபவீதம் சதுர்வேத புஸ்தகமுங்கொண்டு வளர்ந்து வருகையில் கங்காகுல சிரேஷ்டனாகிய ஒரு வேளாளன் மனைவி, புத்திரபாக்கியத்தை

க்குறித்து கெளேரன் அச்சிவாலயத்தில்,தவ
ஞ்செய்திருந்தாள். அப்பொழுது நாம்அவ
ளுடைய தவத்திற்கிரங்கி, இந்தக்குழந்தை
யைநீ எடுத்துக்கொள் என்று, அருள்செய்
து திருவள்ளுவர் என்று நாமகரணமுஞ்செ
ய் என்று ஆஞ்ஞாபித்தோம். அவளும் அந்
தக்குழந்தையை எடுத்து மகிழ்ச்சியடைந்
துகொண்டுபோய்த் தன்புருஷன்கையிற்
கொடுத்தாள். அவனும் அக்குழந்தையை

இருகையேந்தி வாங்கித் தன்மடியி லிரு
த்தி, உச்சிமோந்து, கொஞ்சி, விளையாடி,
பேரானந்தம்பெற்று, அதுவந்த வரலாறு
கேட்டு இருவரும் அந்தப்பிள்ளையை நா
ளொருமேனி பொழுதொரு வண்ணமாய்
வளர்த்துவருங் காலத்தில், அவர்கள் சுற்
றத்தார்கள் எதோ ஒரு பிள்ளையைவளர்க்
கிறார்கள் என்று, இவர்களை இகழ்ச்சிசெ
ய்ய, அதற்கு அவர்கள் அஞ்சிப்புறத்தி
லுள்ள ஓர் தொழுவத்திலே தொட்டிலி
ட்டு, அதில் அக்குழந்தையைக் கிடத்திப்
பண்ணைக்காரனைக் காவல்வைத்து, வளர்
த்தார்கள். பின்பு திருவள்ளுவரும் ஐந்து
வயதானகாலத்துத் தன்பொருட்டுத் தாயும்
தகப்பனும் சுற்றத்தார்களால், நிந்தைசெய்
யப்படுகிறார்கள் என்று அவர்களைப்பார்த்து,

என்னால் உங்களுக்கு வருத்தம் வேண்டுவ
தில்லை ; இனி நான்வேறிடத்தி லிருக்கின்
றேன் ; நீங்கள் வருந்தாதிருங்கள் என்று
சொல்ல, அவர்கள் அப்பா ! மகனே! உன்
னைப் பிள்ளைக்கலி தீர்க்கவந்த பெருமான்
என்று எண்ணியிருந்தோமே ! நீ இப்படிச்
சொல்லலாமா! உன்னை அரைக்கணம் பிரி
ந்து உயிர்தரித்திருப்போமா ? என்று கூற
நாயனார் "நீங்கள் என்னை நினைக்கும்போ

து வந்து உங்களுக்கு வேண்டியவதைச்செ
ய்வேன்; நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்
டியதில்லை" என்று சொல்லிப் புறப்பட்டு,

அவ்வூருக்கு அருகேஒரு பனைமரத்தின் நிழலிலே இருந்தார். அப்பனைமரத்தடி நிழல் அவரைவிட்டு நீங்காதிருக்க அதைக்கண்ட [illegible] இப்பிள்ளை தேவனோ? முனிவனோ? கடவுளோ? இவ்வுருவோடு வந்ததென்று துதிக்க, அவர்களைப் பார்த்து நாயனார் "இங்கே தவமேது? மகிமையேது? யாதொன்றும் என்னிடத்தில் இல்லையே!" என்று தாம் அவ்விடத்தைவிட்டு, நீங்கித்

திருமூலர்,போகர் முதலாகிய சித்தர்களும், மாதவர்களும் வாசஞ்செய்கின்ற மலைக்கு எழுந்தருளித் தவஞ்செய்வார்களோடு கூடியிருந்தார். அங்கிருந்த திருமூலர் நாயனாரைக்கண்டு, வள்ளுவரே! பூர்வத்தில் நந்தி எனக்கு அனுக்கிரகம் பண்ணும்போது, அங்கே இருந்தீரே; உலகத்தாருக்குச் சித்திமுத்தி அருளும்படிக்கும், அறம்பொருள் இன்பமென்னு முப்பாலையுந் தமிழில் அருளிச்செய்யும்படிக்கும், இங்குவந்து அவதரிப்பீரே! என்று துதிக்க, நாயனாரும் மகிழ்ந்து அங்கே தவஞ்செய்வோரில், ஒருவராகித் தாமும் இருந்தார்.

அக்காலத்தில்தொண்டைமண்டலத்தில் ஒரு வேதாளமானது பயிர்களை அழித்தும், உயிர்களைவதைத்தும் அநேகதுன்பஞ் செய்துவந்தது. அப்பொழுதுகாவேரிப்பாக்கம் என்னும் ஓர் ஊரில், ஆயிரம் ஏர்கொண்டு உழுது பயிர்செய்கின்ற "மார்க்கசகாயன்" என்னும் ஒரு வேளாளன இந்த வேதாளத்தை அடக்கினவருக்கு அளவற்ற திரவியமும் ஓர் ஊரும் வேண்டியவைகளையுந் தருகிறேன் என்று பிரசித்தம் பண்ணியிருந்தான். அது ஒருவராலும் ஆகாமலிருந்தது. பின்பு அவ்வேளாளன் பெரியோர்கள் வாசஞ்செய்யாநின்ற மலையில்வந்து திருமூலர் முதலானவர்களுடன் சொல்ல, அவர்கள்

அதோஇருக்கும் திருவள்ளுவரோடு சொல்
லென்றார்கள். அவ்வாறே அவ்வேளாளன்
நாயனாரை வணங்கிச்சொல்ல அப்போது
சிவகாருண்யராகிய நாயனார் அவ்வேளாள
ன் வேண்டிக் கொள்கின்றதை நிறைவேற்றும்
பொருட்டு, அவ்வேதாளத்தைவிபூதிபஞ்சா
ட்சரத்தால் வென்று, யாவரையும் ரக்ஷித்
தார். அதுகண்டு அவ்வேளாளன் முன்னர்
பிரசித்தப்படுத்திய படி. ஓர்லக்ஷமும், அளவ
ற்றதிரவியமும் கொடுத்ததுமன்றி, நாயனார்
யோக்கியத்தையும் மகத்துவத்தையும்பார்

த்து வாசுகியென்னும் தன்பெண்ணையும்
கொடுக்கும்படிநிச்சயித்து நாயனாரிடத்துவ
ந்து சுவாமீ!என்பெண்ணைத் தேவரீர் விவா
கஞ்செய்துகொள்ளவேண்டுமென்றுசொன்
னான்.நாயனார்உலகத்தாருக்குஇல்லறம் நட
த்திக்காட்டவேண்டிய காரணத்தை யோசி
த்து,"அந்தப்பெண்தான்கொடுக்கும்மணலை
அன்னமாக்கி, எனக்குப் படைக்குமானால்
விவாகஞ் செய்துகொள்ளுவேன்" என்றார்.
அந்தப்பெண் அப்படியே சம்மதித்து நாய
னார் கொடுத்தமணலைச் சமைத்துப் படைத்
தனள். பின்பு நாயனாரும் அங்கீகரித்து,
விதிப்படிவாசுகியை விவாகஞ்செய்து,சில
நாள் அங்கிருந்து பின்பு மனைவியுடன்மயி
லையில்வந்து, ஓர் இல்லாக்கிக்கொண்டு, இல்
லறஞ்செய்து செய்தற்றொழில் பாபமில்

லாததென்று நிர்மாணித்து, அவ்வூரிலிருக்
கும் ஏலேலசிங்கன் என்னும் பெரியவர்த்த

கனிடத்தில் நூல்வாங்கி, ஆடை நெய்து
அக்கூலியால் சீவனஞ்செய்து காலங்கழித்
திருந்தனர். அக்காலத்தில் திருவாலங்காட்
டி[illegible] சபாநாயகராக எழுந்தருளியிருக்கும்
[illegible]மை மகிடாசுரசங்காரஞ்செய்து கோவித்
திருந்த பத்திரகாளியுடன் பலவித நடனஞ்
செய்து அவளைக்கோபங்கப்படுத்[illegible] அவ[illegible]

ஞ் சோர்வடையாமல் ஆடிவந்தான். நாம் அப்போது குண்டலங்கழன்றதைகாலிலே தானே சேரும்படி வர்த்துவபாதமாக நடனஞ்செய்தோம். அவனும் அப்படியாட நாணித்தோற்றான். அதுகண்ட தேவர்கள் சந்தேகமுற்றுத் தற்செயலாய் வர்த்துவத் தாண்டவம் பண்ணினது என்னகாரணமோ? தெரியவில்லை என்றுமயங்கியிருக்க, நீங்கள் திருமயிலையில் இருக்குந் திருவள்ளுவனைக்கேட்டீர்களானால் அதுசங்கதி தெரியுமென்றுசொல்ல, தேவர்கள் அங்கேபோய் அவர்கள் முன்னிலையில் நிற்க, அவர் குறிப்பறிந்து சொல்லியது.

வெண்பா.

பூமி நாளும் புரந்தரனும் புலவனைத்
தாமி யனைவோரும் தாமிருக்க—காவி
விழைமுத்தி தமிழ்முனி மேதையுந் தி லேசூ
குறைவதும் பித்தனென் றன் உக்க.

என்னும் வாக்கியத்தைக்கேட்டுத் தங்கள் சந்தேகந்தெளிந்துபோனார்கள்.

ஒருநாள்நாயனார்நூல்வாங்கும்பொருட்டு ஏலேலசிங்கன் வீட்டுக்குப்போய்ச் செட்டியாரெங்கே! என்றுகேட்க, அவர் சிவபூசை செய்கிறார் என்றார்கள். அவர் சிவபூசை இங்குச்செய்கிறாரோ! குப்பத்திற்செய்கிறா

ரோ! வென்ன, அதற்கு அவர்பத்தினியார் உள்ளேபோய் அவருக்குச்சொல்ல, செட்டியார்கேட்டுச் சிவபூசையைவிட்டுத் திடுக்கிட்டோடிவந்து, நாயனாருடைய உபய பாதங்களை வணங்கி, சுவாமி! அடியேனைப் பந்தசாகரத்தினின்று மெடுத்துக் கரையேற்ற வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தனர்; நாயனார் அவரது பக்குவத்தையும் மற்றுஞ் சில மாணாக்கர் பக்குவத்தையும் சோதிக்கவெண்ணி, ஒருநாள் அவர்களை அழைத்துக் கொண்டு, ஒருவனத்திற்சென்று அங்குவெள்ளம்பெருகிவரச் செய்தனர். அவர்கள்பயத்து மனோதிடமின்றி இக்கரையிலிருந்து உடன் போகமாட்டாமல் விழிக்க, ஏலேலசிங்கர்மாத்திரம் தம்மைத் தொடர்ந்துவர, அவ்வெள்ளம் வழிவிட்டது. பின்பு நாயனார் ஏலேலசிங்கரைப் பார்த்து ஓர் உயர்ந்த மாத்திரையொலியில் ஏறென்று சொல்ல, அவர் ஏறியபின் பிடித்தகொம்பையும் பின்னதொம்பையும் விட்டுவிடென்றருள, அவ்வாறே யோசியாமல் விட்டனர் விட்டும் ஒரு அபாயமுமில்லாதிருக்கக்கண்டு, நாயனார் ஏலேலசிங்கரைத் தமது மடியின்மேல்வைத்து ஞானோபதேசம்பண்ணினார். பின்பு தம்மிடத்துக்கு வந்துவிட்

டார்கள். அப்படியிருக்குங்காலில், அந்தநாட்டுக்கு அரசனாகிய அச்சுதராஜன் ஒருநாள் ஏலேலசிங்கரோடு பேசிக்கொண்டிருக்கும்போது உமக்குப் புத்திரப்பேறில்லையே! உம்முடைய ஞானாசிரியரைக் கேட்கலாகாதா! என்ன, அவர் நல்லதென்றுபோய் மற்றொருநாள் நாயனாரைக்கண்டு விண்ணப்பஞ் செய்ய, நாயனார் சுவாமி கடாக்ஷிப்பார் என்று அனுக்கிரகம் பண்ணினார்.

பின்பு ஒருநாள் ஏலேலசிங்கரும் அவர் மனைவியும் வழக்கப்படிக் காலையில் தரிசிக்கும் பசுவின் வாற்புறத்தில் காம்பிருகுழவியாய் இருந்து அழுவதைக்கண்டு, அவர்

ளன் அக்குழந்தையை எடுத்து உச்சிமோ ந்து முத்தமிட்டு ஆனந்தவாரிதியி லழுந்தி னார்கள். உடனேஅந்த அம்மாள் ஸ்தனங் களிலேபால்சரந்து பெருக இக்குழந்தைக் குப் பால்கொடுத்து ஞானகுருவாகிய நாய னார் சந்நிதானத்திற் கொண்டுபோனார்கள். அவர் அக்குழந்தைக்கு அழகராசனென்ற நா மகரணம் செய்து அனுப்பினார். உடனே ஏலேலசிங்கர் அச்சுதராஜனென்னும் அரச னிடத்திற்சென்று, எனக்குத் தெய்வீ கத்தினால் குழந்தை உண்டாயிற்று என்று சொல்ல, அவன் அப்படித்தெய்வீகமானால்

என்னிடத்திலும் அதுவரலாமே என்றான். அவ்விருவரும் இப்படிப்பேசிக்கொண்டிரு க்கும்போது அக்குழந்தை அரசனது மடி யில்வந்திருந்தது.

அதை அவன்கண்டு இது அழகானந்த மோவென்று ஆனந்தமடைந்து, அணைத்துக் கொண்டு தன்மனைவிகையிற்கொடுக்க, அ வள் வாங்கினவுடனே ஸ்தனங்களினின்று பால்பெருக, அதனைக்குழந்தைக்குப் புகட் டினாள். இப்படி அற்புதமாய் அக்குழந்தை வளர்ந்துவந்தது. பின்பு நாயனார் அனைவரு க்குஞானோபதேசஞ்செய்து மகிமையோடி இருந்தனர். மறுஒருதினத்தில் ஏலேலசி ங்கரது கப்பல் கரைதட்டிப்போக அதை க்கேள்விப்பட்டு, அவர்தம்மரசனுடனே சொல்ல, அவன் நம்மாலாவதென்ன இரு க்கிறது. உம்முடைய ஆசாரியருடனேசொ ல்லுமென்ன, அவர்போய் விண்ணப்பம் பண்ணிக்கொள்வதற்கு முன்னமே நாயனு ரறிந்து ஏலேலசிங்கரை அழைப்பித்துக் கூட்டிக்கொண்டுபோய்க் கப்பலிற் கயிறு பூட்டி, அனேகம் படவுகாரர் இழுத்திழு த்து, எவ்வளவும் அசையாமற் பதிந்திருப் பதனால் அவர்களெல்லாருஞ் சோர்ந்து கிட ப்பதைக்கண்டு, நாயனார் அதனருகிற்சென்

று தமது திருக்கைபாற்றொட்டு "ஏலேயா என்று இழுங்கள்" என்று கட்டளையிட, அப்படியே இழுத்தார்கள். உடனே நிற்க வேண்டியபடிகப்பல் சரியாக நின்றது.

பின்பு ஒருகாலம் மழையில்லாமையால் உலகத்தில் தானியங்கொள்ளக் கிடையாமல் அனேகர் இறந்து போவதைக் கண்டு, சிவகாருண்ணியராகிய நாயனார் தமக்கு அன்புள்ளமாணாக்கனாகிய ஏலேலசிங்கனைப் பார்த்து, நீர் இந்தப்பஞ்சகாலம் மாறுகிறவரைக்கும் வாங்கிக் கட்டிவைத்திருக்கும்நெல்லையெல்லாம் வாங்கினவிலைக்குக் குறுணி யேற்றமாக விற்கக்கடவையென்றருள; அவ்வாறே குருமொழிதவறாது விற்றனர். பொருள் மலைபோலுங் குவிந்தன. அவர் கட்டிவைத்திருந்த நெல் எழுவருஷங்குறைந்ததில்லை. பின்பு மழைபெய்து உலகம் க்ஷேமமடைந்தது. மறுபடியும் நாயனார் ஏலேலசிங்கரை நோக்கிக்குறுணிகுறையவில்லென்றார். அப்படியே விற்றார். அவரிடத்தில் இருந்தநெல்லெல்லாம் மறுநாள் அஸ்தமயனத்துக்குள்ளே செலவாய்ப்போய்விட்டன. பின்பு நாயனார் நீர் நெல்லுவிற்று விர்த்தியான பொருளையெல்லாம் உருக்கித்திரட்டிக் கடலிற்போட்டுவிடுமென்ன,

அவர் அப்படியே செய்தார். அதை ஒரு பெருமீன் விழுங்கிற்று. சிலநாள்சென்ற பின் அம்மீன் வலைக்காரர்கையில் அகப்பட்டது. அதனை அவர்கள் சேதிக்கும்போது, அதன்வயிற்றில் மலினமும் பாசியும் படிந்ததொரு ஸ்தம்பமிருக்கக்கண்டு அதனை ஏலேலசிங்கருக்குக் கொடுத்தார்கள். அவர் கருங்கல்லென்றெண்ணி ஸ்நானம் பண்ணுமிடத்திற் போட்டுவித்தார். அதன்மேல் நடத்தன்முதலிய பயிற்சியால் மலினம்நீங்கிப் பிரகாசித்தது. அதில் தமது பேர் வெட்டியிருத்தலால் தம்பொருளென்றறிந்து, இது குருவருளென்று அற்புதமடைந்தார். இப்படி நாயனார் அநேகஅற்புத

ங்களைச்செய்துகொண்டிருக்குநாளிலே பாண்டிநாட்டிலே மதுரையிலே நக்கீரர்முதலிய சங்கப்புலவர்கள் தாம் அடைந்திருந்த கல்விப்பெருக்கால் கர்வமடைந்து, அங்குபோந்த வித்வசிரோமணிகளையெல்லாம் அவமதித்தடைப்பதைக் கேள்வியுற்றிருந்த அழகானந்தர்முதலிய சில பெரியோர்கள் திருவள்ளுவரைப் பார்த்துக் கற்றற்கெளிதாய் இம்மையாதி மும்மைக்குமுதவியாய் லோகோபகாரமாய் உமது பெயரால் ஒரு நூல் செய்யவேண்டுமென்றுவேண்ட, நா

யனார் வேதாகமஸாரங்களைத்திரட்டி அறம் பொருள் இன்பமென முப்பாலாக்கி, 1330 குறள் வெண்பாவாற் பாடியருளினார். பின்பு அழகானந்தர் முதலாயினோர் அந்நூலைக் கண்டு சந்தோஷித்து இதைக்கொண்டு சங்கத்தாரைச் செயிக்கலாம் என்று துணிந்து, நாயனாருக்குத் தங்கள் எண்ணத்தைத் தெரிவித்தனர். நாயனார் தமது மனைவியை இல்லின்கணிருத்தித் தாம் வழிக்கொண்டு நடந்து, இடைக்காடர் வசிக்கிற இடைக்கழிகாட்டை அணுகிச்சேர்கையில், ஔவை கேட்பட, அவனோடும் இடைக்காடரைக் கண்டு தாஞ்செல்லும் காரணத்தைத்தெரிவிக்க, இடைக்காடரும் நாயனாரைநோக்கி "இடையாலுங் கடையாலு மழியக்கடவதென்று ஸ்வாமி தம்மை நிராகரித்த நக்கீராதி சங்கத்தாரைச் சபித்திருக்கிறோர்." ஆதலால் என்னாலு மும்மாலு மச்சங்கம் அழிவுபடப் போகிறதாகையால் நாமும் உம்முடன் வருகிறோம் வாருமென்று இடைக்காடரும் ஔவையுங் கூடவரப்பெற்று மதுரையையடைந்து வையையாற்றில் ஸ்நானஞ்செய்து நித்தியநைமித்தியகருமங்களை முடித்துக்கொண்டு ஆலயத்தைப் பிரதட்சணம்பண்ணி, அங்கு மீனாக்ஷி சொ

க்கலிங்க மூர்த்தமாய் வீற்றிருக்கும் நம்மை

த் தரிசனஞ்செய்தனர். பின்பு டை சங்கி தானத்திலிற்பாண்டிய ராஜா மந்திரி பிரதானிகள் மற்றச்சனங்கள்ஔவை இடைக்காடர் முதலான பெரியோர்க ளிருந்து கேட்கும்படித் தாமருளிச்செய்த திருக்குறள் முப்பாலையும் சங்கத்தார்நெஞ்சிற் றிகிலேறவும், ஏனையர்நெஞ்சிற் களிப்பேறவும், திருவள்ளுவர் அரங்கேற்றி முடித்தனர். அதனைச் செவியாரக்கேட்ட இராஜன் முதலியோர் யாவரும் மிகுந்த ஆச்சரியபரவசராய் நாயனாரைப்புகழ்ந்து துதித்தனர்.

பின்பு நாயனார் இடைக்காடரும் ஔவையும் மற்றவர்களுஞ்சூழ்தரவரப் பொற்றாமரைத் தீர்த்தத்தின்கண்ணுள்ள சங்கப் பலகையின்கண் தமிழ்க்கரசராக வீற்றிருக்கின்றவர்களும் தவத்திலும் ஞானத்திலுஞ் செந்தமிழ்வாக்கிலும் அமைந்த பெரியோ

ராகிய திருவாதவூரரென்னும் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருக்கோவையார் நானூற்றுக்கும் நூறுகுற்றங் கூறினவர்களும், மதன்பதனிய தருமியென்னும் ஏழைப்பிராமணனுக்குப் பொற்கிழி கொடுத்தற்பொருட்டு அருளிச்செய்த,

உஅ திருவள்ளுவநாயனார்சரித்திரம்.

அகவல்.

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின்
மயிலியற் செறியெயிற் றரிவை கூந்தலி
னறியவுமுளவோநீயறியும்பூவே.
என்னும் திருமுகப்பாசுரத்திற்குக் குற்றங் கூறினவரினுல், நாம் ஓர் வித்வானைய் அச்சங்கத்திற்கேனி நக்கீரனைப்பார்த்து,

வெண்பா.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

என்று கேட்டபோது நக்கீரன் நம்மை அறிந்துகொண்டு

வெண்பா.

சங்கறுப்ப தெங்கள்குலஞ் சங்கரனார்க்கேதுகுலம்
பங்கமுறச் சொன்னாற் பழுதாமோ - சங்கை
யரிந்துண்டு வாழ்வோ மரனே நின்போல
விரந்துண்டு வாழ்வ திலை.

என்று சொல்ல, நாம் நமது நெற்றிக்கண்ணைக்காட்ட" அப்போதும் அஞ்சாமலும் உம்மைப்போல எத்தனை மந்திரவித்தைக் காரர்களை நாங்களறிவோம்; நீர் இப்போது

காட்டிய நெற்றிக்கண்ணையன்றி உடம்பெல்லாம் கண்ணாகக்காட்டினும்நீர்பாடிய பாட்டில் குற்றம் குற்றமே என்று கூறினவர்களும் மற்றப் புலவர்கள் பாடிய பாடலை யெல்லாங் கொள்ளையிட்டு, அகஸ்தியரையும் வெற்றிகொள்ளத்தக்க இலக்கண இலக்கிய வாராய்ச்சி யுள்ளவர்களுமாகிய நக்கீராதிப்புலவர்களுடைய தைரியமும் தருக்கும் புத்தியுங் கலங்கிச் சோரவுடையும்படி ஆட்டுக்கூட்டத்தில் புலிபுகுந்தாற்போலவும், அராக்கூட்டத்தில் கருடனடைந்தாற்போலவும், யானைக்கூட்டத்தில் சிங்கவேறு சென்றாற்போலவும், மூங்கில் வனத்திற் றீப்பற்றியதுபோலவும், அவர்களிடத்திற்சென்று அவர்கள் தம்மை வினாவின அசதி வினாக்களுக் கெல்லாஞ் செந்தமிழ்ப்பாவாலுத்தரங்கொடுத்தார்.

பின்பு சங்கத்தார் நாயனாரைநோக்கி,வள்ளுவரே! நீர் எந்தவூர்?என்று கேட்க, அதற்கவர்,

வெண்பா.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

என்பதுமுதலிய ஞானார்த்தமாகிய செய்யு
ட்களால் விடைகூறினார்! பின்பு சங்கத்
தாரைநோக்கி நமது மூதாட்டியாகிய ஔ
வை கைச்சைசஙகயா இவையென்னவெ
ன்றுகேட்க, அவர்கள்,

வெண்பா.

இவ்வளவு கண்ணிரு விவ்வளவு மித்திடையார்
விவ்வளவு போக்த விசமுள்ளா - ரிவ்வளவாய்
[illegible]
[illegible] காட்டுறு தன்று.

என்று விடைகூற, இஃது தகுதியான உத்
திரவன்றென்று அக்குறிகளுக்கு ஔவை
சொல்லியது.

வெண்பா.

ஆய [illegible] யைப்பியமி
[illegible] - [illegible]
மொருமேனே [illegible]
[illegible] மறும்.

என்று மொழிந்ததைக்கேட்டு சங்கத்தார்
[illegible]லடைந்து இவளே வெல்லப்படாதென்
று துணிந்து, இடைக்காடருடனே பேச
அவர், வெண்பா.

ஆற்றல் [illegible]
[illegible] - [illegible]
வெல்லக்கோ [illegible]
[illegible] ழுந்தன் மகள்.

என்றுகூறிய இதுபோன்ற செய்யுட்களுக்
கு உத்திரம்கொடுக்கச் சக்தியின்றி இவர்க
ளெவெல்வ தரிதென்றறிந்து நாணமுற்றச்
சங்கப்புலவர்கள் நாயனாரைநோக்கி, "நீர்பா
டிய குறளை நாங்க ளொப்புக்கொள்ளுவத
ற்கு ஐயமொன் றுளது. அஃதியாதெனி
ன், நாங்களிருக்கு மிந்தப் பலகைதெள்
ளிய செந்தமிழ் நூலைக்கண்டாலிடங்கொ
டுக்குமாதலால் அது ஒப்புக்கொள்ளுமாகில்
எங்களுக்கெல்லாஞ் சம்மதி" யென்றுசொ
ல்ல, அவ்வாறே நாயனார் தம்மால் அருளி
ச்செய்யப்பட்ட திருக்குறள் முறையை
அச்சங்கப்பலகைமீது வைத்தார். உடனே
அப்பலகை தன்னிடத்திருந்த சங்கத்தார்
யாவரும் பொற்றாமரையில்விழும்படி தெ
ய்வத்தன்மை பொருந்தியதிருக்குறட் புத்

தகத்தி னளவாய்ச்சுருங்கி அதற்குமாத்திர
மிடங்கொடுக்கக் கண்டவர்கள் யாவருங்
களிகூர்ந்தனர். அவருட்சிலர் இது தெய்வீ
கமாகிய வேதமென்றுஞ் சிலர் வேதாங்கங்
களென்றுஞ் சிலர் ஞானநூலென்றுஞ்சிலர்
ஆகமமென்றுஞ் சிலபுராணங்களென்றுஞ்
சிலர் வாலிபர் மதனூகமமென்றோர் தத்தமக்
குக் கோன்றியவாறே பலவாறுகச்சொல்
லித்துதித்தனர். அன்றியும் அநேகவிசே

ஷமான பலநூல்களும், சாஸ்திரங்களும்,
இத்திருக்குறளினது பாயிரத்தினேர்பாட
லின் பொருளுக்குமொவ்வாதென்றும், இ
துவே வித்வான்களுடைய பாக்கியமென்
றும், இத்தப்பயன் அநேகமாயிரம் அகஸ்தி
யர்கள் ஒருருவாகிவந்து பாட்டப்பட்டதோ
வென்றும், பலவிலக்கணவிலக்கியங்கட்கும்
இஃது அங்கத்தையொக்குமென்றும், விஷ்
ணுவானவ ரிவ்வுலகை இரண்டடியாலளக்

தார். இது எல்லாருள்ளத்தையு மீரடியா லளந்ததென்றும், இது சட்சமயத்துக்கும் பொதுநூலென்றும், உட்சமயத்துக்கேயுரி யதுவென்றும், கல்விமான்களும் அரசர்க ளும் மற்றவரும் கொண்டாடித் துதிக்கும் போது பொற்றாமரையில் விழுந்து தமோ றித் தத்தளித்து வருந்தி நிற்கும் சங்கப்புல வர்கள் நாற்பத்தொன்பதின்மரும் மிகக் கலங்கிக் கரையேறி நாயனாரையும் திருக் குறளையும் புகழ்ந்துதுதித்து நாற்பத்தொன் பதின்மரும் நாற்பத்தொன்பது வெண்பா அருளிச்செய்தனர். அஃது திருவள்ளு வமாலையெனப் பெயர்பெறும்.

டி சங்கத்தாரும் உக்கிரப் பெருவழுதி யென்னும் பாண்டியன் முதலானவர்களும் நாயனாரைத்துதித்து அத்தியந்தம் ஆனந்த மடைந்து வெகுபூசிதம்பண்ணி இந்நூலை அகஸ்தியரும் ஒப்புக்கொளின் மிகநல்ல தென்ன, அதற்குநாயனார்சம்மதித்துவிடை பெற்றுப் பொதியமலைக்குப்போய் அகஸ்தி யர் முதலிய முனிவர்களைக்கண்டு தாஞ்செ ய்த நூலைக்காண்பிக்க,அவர்கள் அதை நன் குணர்ந்து அடைந்த சந்தோஷத்தையும் புகழ்ந்தபாடலையும் அனந்தனாலுஞ் சொ ல்லமுடியாது. அவ்விடத்தில் கொங்கண சித்தர் தம்மை வழிபட அவருக் கனுக்கிர கித்து நாயனார் அவர்களிடத்தில் உத்தரவு பெற்றுத் தாம் முன்பு போம்போது வழி யில் நேர்படாத ஸ்தலங்களையெல்லாந்தரிச னம்பண்ணிக்கொண்டு திருமயிலைக்குச் சமீ பமாக வருவதை அப்பதியாரும் ஏலேல சிங்கரும் கேள்விப்பட்டு எதிர்கொண்டு போய் அழைத்துவந்தார்கள். அவரும்வந்து தமதில்லத்தில் வாசுகியாரினோடு மிருந்து இல்லறம் நடாத்திவந்தார்.

இப்படி இருக்கையில் ஒருபெரியவர்அவ ரிடத்திற்சென்று சுவாமி! இல்லறம் பெ ரிதோ? துறவறம் பெரிதோ? அடியேனுக்

கு அநுக்கிரகிக்க வேண்டுமென்று பலநாள் பணிசெய்து காத்திருக்க, நாயனார் அவருக்கு உத்தரமொன்றுஞ் சொல்லாமல் அவரே அறிந்துபோம்படி ஒருநாள் தமது வாசுகி யென்னும் மனையாள் கிணற்றில் ஜலந்தூக்கிக்கொண்டிருக்கையில் அழைக்க, அந்தம்மாள் பாதிகிணற்றளவில் தூக்கினகுடத்தை அப்படியே நிற்கவிட்டு வந்ததையும், மற்றொருநாள் அந்தம்மாள் நாயனாருக்குப் பழையது பரிமாறி நிற்கையில், நாயனார் எனக்கு இச்சாதஞ் சுடுகின்றதென, அந்தம் [redacted]ம் விசிறிகொண்டு விசிறியதையும், மற்றொருநாள்நல்ல மத்தியான[redacted] சிறி திருளானகாலிடத்தில் தாம் செய்யும் போது கையிலிருந்த குழல் தவறி வீழ்ந்ததையெடுக்க மனையாளைநோக்கித் தீபங்கொண்டுவாவெனக் கொண்டுவந்ததையும், வந்திருந்தவர்கள் கண்டு, இப்படிப்பட்ட மனையாள்வாய்க்கில் இல்லறமே பெரிதென்றும், இல்லையேல் துறவறமே பெரிதென்று மெண்ணிக்கொண்டு ஒன்றுங்கேளாமற்போய் விட்டார்.

இப்படி நாயனாருந் தம்மனைவியும் அருமையாக இல்லறநடாத்திவரும்[redacted]த்தில் வாசுகியம்மாள் மோட்சமடையும்போது

நாயனார் திருமுகதப்பார்க்க, நாயனாரும் என்னென்றார். என்னை மணஞ்செய்தவன்று தொடங்கித் தேவரீருக்கு அன்னம் பரிமாறும்போது ஒரு சிறு பாத்திரத்திற் சலமும் ஊசியும் வையெனக்கட்டளையிட்டது இன்னகாரணமென இன்றுவரையில் அடியேற்குத்தெரியவில்லை யென்று விண்ணப்பஞ்செய்ய, நாயனார் அன்னம் புறத்திற் சிதறில் எடுத்துப் பரிசுத்தஞ்செய்வதற் கெனறுசொல்ல அதைக்கேட்டவுடனேமோட்சமடைந்தனள்.

அப்போது நாயனார்பாடிய

வெண்பா.

அடிசேர்வினைக்கே யனப்புடையானே
படிசொந்தமுத பாவை வடிவுடைய
பினரூகனி முன்னெழுந்த பேதையே பேசநீயோ
மௌனமுக்கு மௌனகனிரர.

என்றுரைத்து அத்தம்மாள் திருமேனியைச் சமாதிபண்ணினார். பின்பு அவர் மகா அற்புதங்களைச்செய்துகொண்டிருந்தவேலே லிங்கரைப்பார்த்து நமக்குப் பரிபூரண நிலை நேரிட்டிருப்பதால் நமது சரீரத்தை வீண் டம்பமின்றி புரிகட்டித்தெருத்தெருவாய் இழுத்துக் கடைசியில் ஊர்ப்புறத்தில் ஈசானியதிசையில் போட்டுவிடெ

ன்று கட்டளையிட்டு [redacted]டைகூடிப் பரிபூரணமானவர்போல் இருக்கக்கண்டு, ஏலேலசிங்கர், பொற்பெட்டியில் வைத்து அடக்கஞ்செய்ய எத்தனித்தனர். அதற்கு நாயனார் கண்விழித்துப்பார்த்து "அப்பா! நான்சொன்ன சொல்லைக் கடவாதே" யென்று சொல்லி, உடனே விதேகமுத்தியடைந்தனர்.

ஏலேலசிங்கர் நாயனார் கட்டளையைச் சிரமேற்கொண்டு அவர்சொல்லிய வண்ணம் நாயனாரைப் புரிகட்டியிழுத்துத்தெருத்தெருவாய்ச்சுற்றிப் பின்னர் ஈசானியமூலையில் எறிந்துவிட்டனர்.

அவரது சரீரப்பரிசமடைந்த ஜெந்துக்களெல்லாம் பொன்னிறமடைந்து சுவர்க்கம் பெற்றன என்று உமாதேவியாருக்கு பரம கிருபாநிதியாகிய பரமேஸ்வரர் திருவாய் மலர்ந்தருளினார்.

திருவள்ளுவநாயனார்
திவ்விய சரித்திரம்
முற்றிற்று.
